# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 29, 2025 Weekly E-paper ● March 29, 2025




# திமுக போராடும்! திமுக வெல்லும்!!

சுப.வீரபாண்டியன்

## அமித்ஷாவிடம் சரணடைந்த ‘பல்டி’ பழனிச்சாமி!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## முதல்வரின் தீர்மானம்!

தலையங்கம்

## விலக மறுக்கும் திரைகள்

நூல் அறிமுகம்: வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 29, 2025 Weekly E-paper ● March 29, 2025


# திமுக போராடும்! திமுக வெல்லும்!!



**சுப.வீரபாண்டியன்**

ஒரு கட்சியின் பொதுக்குழுவிற்கும், பொதுக்கூட்டத்திற்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு! பொதுக்குழு என்பது அமைப்பைக் கட்டி எழுப்புவதும், வரும் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களை முடிவு செய்வதுவாக அமையும்!

அரசியல் விமர்சனங்களும் கண்டிப்பாக இடம்பெறும். ஆனால் தவெக வின் பொதுக்குழு ஒரு பொதுக்கூட்டமாக நடந்திருக்கிறது!




கட்சியின் தலைவர் நடிகர் விஜய் இறுதியாக உரையாற்றும் போது, நேரடியாகத் திமுகவைத் தாக்கிப் பேசி இருக்கிறார்! ஒரு குடும்பம் ஒரு நாட்டையே சுரண்டுகிறது என்கிற அளவுக்கு, ஒரு மலிவான அரசியலை முன் வைத்திருக்கிறார். பாம்புக்கும் வலிக்காமல், தடிக்கும் நோவாமல், பிஜேபியை அடிப்பது போல ஒரு பாசாங்கும் செய்திருக்கிறார்!

2026 தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி வைத்து, துணை முதல்வராக ஆவது விஜயின் ஒரு திட்டமாக இருக்கலாம்! அல்லது, அவரே குறிப்பிட்டு இருப்பது போல, ரகசிய முதலாளியின் ஆணைப்படி தனியாக நின்று, சிறுபான்மையினர் வாக்குகளைப் பிரிப்பது, அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையாக இருக்கலாம்!

நடைமுறையில் இரண்டுமே நடக்கப் போவதில்லை என்பதை, விஜய் கால ஓட்டத்தில் உணர்வார் !

மும்மொழித் திட்ட எதிர்ப்பு, தொகுதி மறுசீரமைப்புத் திட்ட எதிர்ப்பு ஆகியன அவர் பேச்சில் இடம்பெற்றுள்ளன. ஆனாலும் அவற்றுக்கெல்லாம் அவர் எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை. மேலோட்டமாக மட்டுமே சொல்லிச் சென்றார் !

தேர்தல் நெருங்க நெருங்க, இன்னும் பல கூத்துகள் அரங்கேறும்! கூட்டணிகள் திசை மாறும் !

எது நடந்தாலும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று , மீண்டும் ஆட்சியை அமைக்கப் போவது திமு கழகம்தான் என்பதை 2026 எடுத்துச் சொல்லும்!

திமுக போராடும் !

திமுக வெல்லும்!!

●

# அமித்ஷாவிடம் சரணடைந்த ‘பல்டி’ பழனிச்சாமி!

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

பேரறிஞர் அண்ணா தொடங்கி அம்மையார் ஜெயலலிதா வரை தரக்குறைவாக விமர்சித்த தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலையைக் கண்டித்து அக்கட்சியுடனான கூட்டணியை முறித்துக் கொள்வதாக அ.இ.அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிவித்தார்.

வெளியில் இப்படி சொல்லப்பட்டாலும் கூட அ.இ.அ.தி.மு.க - பா.ஜ.க இடையே கள்ளக் கூட்டணி தொடர்வதாக தி.மு.க தலைவர் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணியை உடைப்பதற்காகவும், சிறுபான்மையினர் வாக்குகளை கவர்வதற்காகவும் அ.இ.அ.தி.மு.க - பா.ஜ.க நடத்திய நாடகம் பலனளிக்கவில்லை.

இந்நிலையில் 26.03.2025 அன்று இந்திய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை அவரது இல்லத்தில் தனது ஆதரவாளர்களுடன் எடப்பாடி பழனிச்சாமி சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.



டெல்லி விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய பழனிச்சாமி "டெல்லியில் கட்டப்பட்டு வரும் தங்கள் கட்சி அலுவலகத்தை பார்வையிட" வந்ததாகத் தெரிவித்தார்.

ஆனால் அதே நாள் இரவு இன்னோவா, ஆடி, பென்ட்லி என பல கார்களில் மாறிமாறி பயணம் செய்து பழனிச்சாமி அமித்ஷாவை சந்தித்துள்ளார். மக்கள் பிரச்சனைக்காகவே இந்த சந்திப்பு நடந்தாகக் கூறும் பழனிச்சாமி எதற்காக இத்தனை கார்களில் மாறி மாறி பயணம் செய்ய வேண்டும். கோரிக்கை மனு எதையும் அவர் உள்துறை அமைச்சரிடம் அளித்தாகவோ, மனுவின் நகலை ஊடகங்களிடம் வழங்கியதாகவோ தெரியவில்லை.

கடந்த ஜனவரி மாதம் பழனிச்சாமியின் உறவினரான ஈரோடு இராமலிங்கம் தொடர்புடைய 26 இடங்களில் நடத்தப்பட்ட வருமான வரி சோதனையில் ரூ.750 கோடி வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டதுடன், கணக்கில் வராத பணம் ரூ.10 கோடி பறிமுதல் செய்யப்பட்டது. பழனிச்சாமியின் மகன் மிதுன் ஈரோடு இராமலிங்கத்தின் தொழில் பங்குதாரர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே போல் அமலாக்கத் துறை டாஸ்மாக் அலுவலகத்தில் சோதனை நடத்திய போது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட 41 எப்.ஐ.ஆரின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டதாகத் தெரிவித்தது. அதில் 34 எப்.ஐ.ஆர் 2016 - 2021 அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் பதிவு செய்யப் பட்டதாகும்.

இதிலிருந்து தப்பிக்கவே டெல்லி சென்று அமித்ஷாவிடம் சரண் அடைந்துள்ளார் எடப்பாடி பழனிச்சாமி. இதன் மூலம் *"பல்டி" பழனிச்சாமி, "பல கார்" பழனிச்சாமி* போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ள பழனிச்சாமி, அமித்ஷாவிடம் இருமொழிக் கொள்கையை வலியுறுத்தியதாக ஊடகங்களிடம் கூறியுள்ளார். 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பழனிச்சாமியின் தாயார் மறைவெய்திய போது இந்தியில் இரங்கல் கடிதம் அனுப்பினார் அமித்ஷா. அதையே கண்டிக்கத் திராணியற்ற பழனிச்சாமி இப்போது அவரிடம் இருமொழிக் கொள்கையை வலியுறுத்தினார் என்பதை எவ்வாறு ஏற்க முடியும்.

இந்த சந்திப்பிற்கு பிறகு "2026ல் தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமைந்த பின்பு, மது வெள்ளமும், ஊழல் புயலும் முடிவுக்கு வந்துவிடும்" என்று எக்ஸ் வலைத்தளத்தில் அமித்ஷா பதிவு செய்துள்ளார். தமிழ்நாட்டில் மதுபானங்களின் மொத்த விற்பனையை 1983 ஆம் ஆண்டு மே மாதம் டாஸ்மாக் தொடங்கியது. அப்போது நடைபெற்றது எம்.ஜி.ஆர் ஆட்சி. தமிழ்நாட்டில் மதுபானங்களின் சில்லறை விற்பனையை 29.11.2003 ஆம் தேதி முதல் டாஸ்மாக் தொடங்கியது. அப்போது நடைபெற்றது ஜெயலலிதா ஆட்சி. இந்திய ஒன்றியத்திலேயே ஊழலுக்காக உச்சநீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒரே முதல்வர் ஜெயலலிதா. இந்த உண்மை புரியாமல் இவர்களோடு கூட்டு வைத்து மது வெள்ளத்தையும், ஊழல் புயலையும் ஒழிக்கப் போகிறாராம் அமித்ஷா.

அமித்ஷா - பழனிச்சாமி சந்திப்பு பற்றிக் குறிப்பிடும் போது அ.இ.அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் ஆர். பி.உதயகுமார் "இந்தியாவின் இரும்பு மனிதர் அமித்ஷா. தமிழ்நாட்டின் இரும்பு மனிதர் பழனிச்சாமி" என்று கூறியுள்ளார். வீரபாண்டியக் கட்டபொம்மன் திரைப்படத்தில் "எனக்கு இரும்புத் தலையன் என்று பெயர்" என பானர்மேன் சொல்லும் போது, "உருக்க வேண்டிய பொருள் மீது இரக்கம் காட்டிப் பேசியது என் தவறு தான்" என்று பதிலுரைப்பார் கட்டபொம்மன். அதைப் போல தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்த நினைக்கும் அமித்ஷா கூட்டத்தையும், அவர்களுக்கு துணை நிற்கும் அடிமைக் கூட்டத்தையும் தமிழ்நாட்டு மக்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் முற்றிலுமாக நிராகரிப்பார்கள். •

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## முதல்வரின் தீர்மானம்!



அமெரிக்காவில் செயல்பட்டுவரும் பன்னாட்டு மதச் சுதந்திரத்திற்கான ஆணையம் வெளியிட்டுள்ள 2025 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், இந்தியாவில் சிறுபான்மையினருக்கான மதச் சுதந்திரம் தொடர்ந்து மோசமடைந்து வருவதாகக் கூறியிருக்கிறது. இந்திய ஒன்றியம் அதனை மறுத்துள்ளது.

27-03-2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில், ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள இஸ்லாமிய சிறுபான்மையினரின் வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிராக முதலமைச்சர் தீர்மானம் கொண்டுவந்து, பாஜக நீங்கலாக அதை ஒரு மனதாக நிறைவேற்றி உள்ளார்.

அதில் இந்தியத் திருநாட்டில் மத நல்லிணக்கத்துடன் அனைத்து மதத்தவரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

ஒன்றிய வக்ஃபு திருத்த மசோதாவால் இஸ்லாமியர்கள் பாதிப்புக்கு ஆளாகிறார்கள். மாநில வக்ஃபு வாரியங்களில் இரண்டு முஸ்லிம் அல்லாத உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று திருத்தச் சட்டப் கட்டாயப் படுத்துகிறது.

வக்ஃபு நிலங்களை நில அளவை செய்யும் அதிகாரம், நில அளவை ஆணையரிடம் இருந்து மாவட்ட ஆட்சியருக்கு மாற்றப் பட்டுள்ளது. ஒன்றி அரசின் வக்ஃபு திருத்த மசோதா இஸ்லாமிய மக்களின் மத உரிமைகளைப் பாதிப்பதாகவும், அவர்களின் மத நிர்வாகத்தில் தலையிடுவதாகவும், இஸ்லாமியருக்கு எதிரான பிறகூறுகளைக் கொண்டும் இருக்கிறது.

இத்திருத்தச் சட்டம் மத நல்லிணக்கத்திற்கும், சிறுபான்மை மக்களுக்கும்-குறிப்பாக இஸ்லாம் மக்களுக்குப் பெரும் ஊறு விளைவிக்கும் முகமாக இருப்பதால் ஒன்றி அரசுசின் வக்ஃபு திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று முதல்வரில் தனித்தீர்மானம் சொல்கிறது.

இப்போது தொடக்கத்தில் சொல்லியிருக்கும் அமெரிக்காவின் பன்னாட்டு மதச் சுதந்திரத்திற்கான ஆணையம் சொல்லி இருப்பதைப் படியுங்கள்!

சொல்வேறு, செயல்வேறு இருக்கக்கூடாது என்கிறார், எங்கள் திருவள்ளுவர்.

## திராவிடப் பள்ளி மாணவர்கள் சந்திப்பு




திராவிடப் பள்ளியின் மாணவர்கள் சந்திப்பு 23-03-2025 அன்று சென்னை அன்பகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி, தலைமை உரையாற்றினார் பொள்ளாச்சி மா.உமாபதி. 'திராவிடம் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானதா?' என்று தோழர் வாலாசா வல்லவன், "இட ஒதுக்கீடு வரலாறு" என்று தோழர் கோ.கருணாநிதி இருவரும் உரையாறினார்கள். தோழர்கள் வெற்றிச் செல்வன், எட்வின் உள்படத் தோழர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.


ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# விலக மறுக்கும் திரைகள்

நூல் அறிமுகம்

**வெற்றிச்செல்வன்**

இராஜஸ்தான், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் பெண்ணாகப் பிறப்பதே ஒரு சாதனையாகத்தான் இருக்கிறது என்ற செய்தியுடன் தொடங்குகிறது நூலின் முதல் கட்டுரை. பிறப்பதே சவாலாக இருக்கும் சூழ்நிலையில், பெண்கள் வளர்ந்து, ஆளாகி, கல்வி கற்று, சாதிப்பது என்பவைகளுக்கெல்லாம் எத்தனை சோதனைகளைத் தாங்க வேண்டியிருக்கிறது! அவற்றில் சில பிரச்சினைகளை விவாதித்திருக்கிறது *“விலக மறுக்கும் திரைகள்”* என்னும் நூல். தோழர் பா. ஜீவசுந்தரி எழுதிய இந்நூல், அண்மையில் ‘இந்து தமிழ்திசை’ நாளிதழில் தொடராக வெளிவந்தது. இப்போது நூல்வடிவம் பெற்றுள்ளது.




”நான் எப்போதேனும் மந்திரியாக நேர்ந்தால், பெண்களின் படிப்புக்காக மட்டுமே பணத்தைச் செலவிடுவேன்” என்ற தந்தை பெரியாரின் வாசகத்தை மேற்கோளாகக் காட்டி முடிவடைந்துள்ள முதல் கட்டுரையானாலும் சரி, மாதவிடாய் பிரச்சினை தொடங்கி, பெண்கள் அரசியல் அதிகாரம் பெறுவது வரையிலுமான கட்டுரைகளானாலும் சரி, பெண்களுக்கான பிரச்சினைகளின் பல்வேறு பரிமாணங்களை விவாதமாக்குவதிலும், கேள்விகளை எழுப்புவதிலும் மிக முக்கியமான வேலையை இந்நூல் செய்துள்ளது.

சுயமரியாதைத் திருமணங்கள் குறித்த கட்டுரை ஒன்றில், அத்திருமணத்தின் வரலாறை விரித்துரைப்பதோடு, “தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களேயானாலும்கூட இந்தியாவின் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் சுயமரியாதைத் திருமணத்தை நடத்திவிட முடியாது” என்றும் சொல்லியிருப்பது நிதர்சனமான உண்மை. இந்த நிலைமைக்குப் பெரியாரும், திராவிட இயக்கமும் அன்றி வேறு யார் காரணமாக இருக்க முடியும்? வட மாநிலங்களோடு ஒப்பிடும்போது, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட சமூகநலக் குறியீடுகளில் மட்டுமின்றி முற்போக்கான சமூகப் பார்வையும், பெண்களின் உரிமைக்கான தளமும் இயங்குவது தமிழ்நாட்டில் மட்டும்தான்.

சட்டம் இயற்றுவதால் மட்டுமே ஆணவக் கொலைகளைத் தடுத்துவிட முடியுமா என்ற கேள்வி சிந்திப்பதற்கு உரியது. இந்த நவீன யுகத்திலும் ஜாதி என்பது மேட்ரிமோனியல் வலைத்தளங்கள் மூலம் பாதுகாக்கப்படுவதைச் சுட்டிக் காட்டி, பெரியார் இயக்கமும், பொதுவுடைமை இயக்கமும் இம்மண்ணில் ஜாதி, மதம் கடந்த திருமணங்களை நடத்தி, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியதையும் நினைவுபடுத்துகிறது. ஆணவக்கொலை என்பதை ஜாதியை மையப்படுத்தி மட்டுமே பலரும் பேசி வருகின்றனர். ஆணவக் கொலைகளுக்கான முக்கிய காரணமான ஆணாதிக்க மனப்பான்மை பெரும்பாலும் விவாதிக்கப்படுவதில்லை. ஆனால் அந்த இடத்தில் பெண்களை உடைமையாகக் கருதும் மனப்போக்கைச் சுட்டி, அந்த மனப்போக்கு மாற வேண்டும் என்கிறது இந்நூல்.

பெண்களுக்கு மாதவிடாய் கால விடுமுறை அளித்த முதல் நாடு சோவியத் ஒன்றியம் என்ற முக்கிய தகவலோடு, மாதவிடாய் விடுமுறையை வலியுறுத்திச் சொல்கிறது ஒரு கட்டுரை. பெண்கள் வாக்குரிமைக்கான போராட்ட வரலாற்றை எடுத்தியம்பும் கட்டுரையில், 1921 இலேயே நீதிக்கட்சி ஆட்சியின்போது பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது என்ற தகவலையும் சேர்த்திருக்கலாம்.

ஆயுத பூஜை, தீபாவளி, விநாயகர் சதுர்த்தி என்று கடவுளின் பெயரால் நடத்தப்படும் பண்டிகைகளின் விளைவினால் சுற்றுச்சூழல் எவ்வாறெல்லாம் கெடுகிறது என்பதை எளிதில் புரிய வைக்கிறது ஒரு கட்டுரை. உணவில் கலப்படம் செய்யப்படுவதால் ஏற்படும் தீமைகள், துரித உணவுகளால் உண்டாகும் சிக்கல்கள் ஆகியவற்றை விவரிக்கும்போது, “ *உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே* என்ற உயர்ந்த சிந்தனையுடன் செயல்பட்டு வந்த தமிழ்ச்சமூகம் இன்றைக்கு அந்தச் சிந்தனையினின்றும் பிறழ்ந்து தடுமாறித் தள்ளாடிக் கொண்டிருக்கிறது” என்ற வரிகள் கவனத்திலும், கருத்திலும் வைக்க வேண்டியவை. பெண்ணுரிமை தாண்டிய இதுபோன்ற சில கருப்பொருள்களும் இந்நூலில் விவாதிக்கப் பட்டுள்ளன.

பெண்களின் படைப்புத் திறனை ஊக்குவிக்கும் வகையில் தொடர்ந்து பெண்களுக்கான ஆக்கங்களை வெளியிட்டு வரும் “ஹெர் ஸ்டோரிஸ்” பதிப்பகத்தின் வெளியீடாக வந்திருக்கும் இந்நூல் காலத்திற்கேற்ற கருத்துப் பெட்டகம்.

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | **விலக மறுக்கும் திரைகள்** |
| **ஆசிரியர்** | : | **பா. ஜீவசுந்தரி** |
| **பதிப்பகம்** | : | **ஹெர் ஸ்டோரிஸ்** |
| **விலை** | : | **ரூ. 150** |